<u>DEPOSITION OF WITNESS</u>

(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.1, SANKARI.

| | | | |
|---|---|---|---|
| Case No | : C.C.434/2023 | Date | : 07-09-2026 |
| Deposition of Witness for | : அ.சா.4 | Taluk | : |
| Name | : திரு. சண்முகக்குமார் | Calling | : |
| Father/Husband Name | : | Religion | : |
| Village | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 07.09.2026.

<u>(எதிரி ஆஜர் இல்லை, எதிரியின் சார்பில் குவிமுச 317 ன் கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது, எதிரியின் வழக்கறிஞர் ஆஜர்).</u>

<u>**அரசு தரப்பு முதல் விசாரணை** :</u>

1) நான் சேலம் மாவட்டம், மகுடஞ்சாவடி காவல் நிலையத்தில் சிறப்பு காவல் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 13.04.2021 ஆம் தேதி, நான் சங்ககிரி காவல் நிலையத்தில் நிலைய அலுவலில் இருந்தபோது, முன்னதாக சங்ககிரி அரசு மருத்துவமனையிலிருந்து கிடைக்கப்பெற்ற ராமகிருஷ்ணன் மற்றும் செந்தில்குமார் ஆகியோர்களின் RTA தகவலினைப் பெற்றுக்கொண்டு அங்கு சென்று பார்த்தபோது அடிப்பட்டவர்கள் மேல்சிகிச்சைக்காக சேலம் காவேரி மருத்துவமனையில் சிகிச்சையில் இருப்பதாக தகவல் அறிந்து அங்கு சென்று சிகிச்சையில் இருந்த ராமகிருஷ்ணன், என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து, நிலையம் வந்து ஒப்படைத்த மேற்படி வாக்குமூலத்தின் பேரில் சங்ககிரி காவல் நிலைய குற்ற எண்.161/2021, சட்டப்பிரிவுகள் 279, 337 இதச-ஆகிய பிரிவின் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். முதல் தகவல் அறிக்கையை, புகார்

வாக்குமூலத்துடன் இணைத்து கனம் குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.1, சங்ககிரி அவர்களுக்கும், மற்ற நகல்களை சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கு அனுப்பி வைத்தேன் (**புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1 ஆகவும், முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.2 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது**).

2) பின்னர், அன்றைய தினமே, மாலை சுமார் 04.15 மணிக்கு சம்பவயிடம் சென்று சாட்சிகள் மோகன் மற்றும் சதீஷ் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடம் வரைந்து பார்வை மகஜர் தயார் செய்து சாட்சிகள் கையொப்பம் பெற்றேன் (**பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் முறையே அ.சா.ஆ.3 மற்றும் அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). பின்னர் சம்பவயிட சாட்சிகள் பிரகதீஸ்வரன், திருநாவுக்கரசு ஆகியோர்களை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

3) பின்னர் சாட்சிகளை விசாரணை செய்ததில் சம்பவம் நடந்தது உண்மையென தெரிந்து எதிரி ரிஷிகுமார், த/பெ.சந்திரன் என்பவரை தேடிவந்த நிலையில் கடந்த 19.04.2021 ஆம் தேதி, மாலை சுமார் 03.30 மணிக்கு சங்ககிரியில் வைத்து கைது செய்து தக்க இருநபர் நிலைய பிணையில் விடுவித்துள்ளேன்.

4) பின்னர், கடந்த 19-04-2021 ம் தேதி, இவ்வழக்கில் சம்மந்தப்பட்ட எதிரியின் வாகனமான TN 30 BQ 0591 என்ற பதிவு எண் கொண்ட Yamaha MT இருசக்கர வாகனம் மற்றும் கடந்த 13-07-2021 ம் தேதி, விபத்திற்குள்ளான TN 90 D 2932 என்ற பதிவெண் கொண்ட Honda Shine இருசக்கர வாகனம் ஆகியவற்றையும் வேண்டுகோள் கடிதம் கொடுத்து மோட்டார் வாகன ஆய்வுக்கு அனுப்பி வைத்து, பின்னர், வாகனங்களை ஆய்வு செய்த மோட்டார் வாகன

ஆய்வாளர் திருமதி.புஷ்பா என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து ஆய்வறிக்கைகளை பெற்றுள்ளேன். (**TN 30 BQ 0591 என்ற பதிவு எண் கொண்ட Yamaha MT இருசக்கர வாகனம் மற்றும் TN 90 D 2932 என்ற பதிவெண் கொண்ட Honda Shine இருசக்கர வாகனம் ஆகியவற்றின் மோட்டார் வாகன ஆய்வறிக்கைகள் முறையே அ.சா.ஆ.5 மற்றும் அ.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது**).

5) பின்னர், கடந்த 16-07-2021ம் தேதி, விபத்தில் காயமடைந்த ராமகிருஷ்ணன் மற்றும் செந்தில்குமார் ஆகியோர்களுக்கு சிகிச்சை அளித்த சேலம் காவேரி மருத்துவமனை சென்று மருத்துவர் திரு.அருண் என்பவரை விசாரித்து விபத்து பதிவேடு அறிக்கைகள் மற்றும் காயச்சான்றுகள் பெற்று அவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளேன் (**விபத்து பதிவேட்டு அறிக்கைகள் மற்றும் காயச்சான்றுகள் முறையே அ.சா.ஆ.7 முதல் அ.சா.ஆ.10 வரையாக குறியீடு செய்யப்படுகிறது**).

6) பின்னர், ராமகிருஷ்ணன் மற்றும் செந்தில்குமார் ஆகியோர்களுக்கு ஏற்பட்ட காயங்கள் கொடுங்காயங்கள் என மருத்துவர் காயச்சான்றுகள் வழங்கியதால் இவ்வழக்கின் சட்டப்பிரிவுகளை 279, 337 இதச- பிரிவிலிருந்து சட்டப்பிரிவுகள் 279, 338 (2 Counts) இதச- பிரிவாக மாற்றம் செய்து சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கையை கனம் நீதித்துறை நடுவர் எண்-1, சங்ககிரி அவர்களுக்கு அனுப்பி வைத்துள்ளேன் (**சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை அ.சா.ஆ.11 ஆக குறியீடு செய்யப்படுகிறது**).

7) அத்துடன் இவ்வழக்கின் புலன் விசாரணை முடித்து எதிரியின் மீது சட்டப்பிரிவுகள் 279, 338 (2 Counts) இதச- ஆகிய பிரிவுகளின் கீழ் குற்ற இறுதி அறிக்கை தயார் செய்து கனம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேன்.

**<u>குறுக்கு விசாரணை</u> : -**

1) சம்பவ சாலை போக்குவரத்து நிறைந்த சாலை என்றால் சரிதான். சம்பவ இடத்தை யார் எனக்கு அடையாளம் காட்டியது என்றால் விபத்து நடந்த உடனே தகவல் கிடைத்து நானே சம்பவ இடத்திற்கு சென்று பார்த்தேன். சம்பவ இடத்திற்கும், காவல் நிலையத்திற்கும் சுமார் 4 கி.மீ தூரம் இருக்கும். சம்பவம் நடந்ததாக தகவல் கிடைத்து தான் நான் சம்பவ இடம் சென்றேன் என்றால் சரிதான்.

2) சம்பவ இடம் சென்றபோது நானாகவே சம்பவ இடத்தை முடிவு செய்தேனா என்றால் இல்லை, அருகில் இருந்தவர்களை விசாரித்து சம்பவ இடத்தை தெரிந்துகொண்டேன். மாதிரி வரைபடத்தில் காட்டியுள்ள சம்பவம் நடந்த இடத்தில் அருகில் இருந்த கடையில் இருந்தவர்களை சாட்சியாக விசாரிக்கவில்லை என்றால் சரிதான். சம்பவம் நடந்த இடத்தின் அருகே நான்கு சாலைகள் பிரிவதால் அங்கு வாகனங்கள் வேகமாக செல்லக்கூடாது என்பதற்காக பேரி கேட்கள் வைக்கப்பட்டுள்ளது என்றும், அதனால் வாகனங்கள் வேகமாக செல்ல இயலாது என்றால் சரிதான்.

3) நான் சொன்னவாறு சம்பவம் நடைபெறவில்லை என்றும், விபத்தில் அடிப்பட்ட நபர்களுக்கு இழப்பீடு பெற்றுத்தர வேண்டி பொய் புகார் பெற்று, நான் சம்பவ இடமே செல்லாமல் காவல் நிலையத்தில் வைத்து ஆவணங்களை தயார் செய்து, நான் சரிவர புலன் விசாரணை செய்யாமல் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

Sd/-S.Sathiya,
Judicial Magistrate No.1,
Sankari.

Sd/-Shanmughakumar